த.வெ.க. ஆட்சியில் தொடரும் கொள்ளைச் சம்பவங்கள்:

டாஸ்மாக் பணம் ரூ.1.50 கோடி கொள்ளை !

சென்னை, நவ.13 -

டாஸ்மாக் கடைகளில் வசூலான ரூ.1.50 கோடி பணத்தை காருடன் கடத்திச் சென்ற மர்ம கும்பல், பின்னர் காரை சாலையோரம் நிறுத்திவிட்டு பணத்தை மட்டும் எடுத்துக் கொண்டு தப்பியுள்ளனர்.

த.வெ.க. ஆட்சியில் தினம் தினம் கொலைகளும், கொள்ளைகளும் அரங்கேறி வருவதற்கு இதுவும் ஒரு சான்றாகும்.

தமிழ்நாடு முழுவதும் ரவுடிகள் பிடிபட்டு வருவதாக கூறப்பட்ட நிலையில் இக்கொள்ளை நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.



டாஸ்மாக் மதுக்கடைகளில் வசூலாகும் பணம் தனியார் ஏஜென்சி நிறுவனம் மூலம் சேகரிக்கப் பட்டு, டாஸ்மாக் அலுவலகத்தில் செலுத்தப்பட்டு வருகி றது. இதற்காக தனியார் நிறுவனத்தின் சார்பில் ஊழி யர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அந்த வகையில், நேற்று முன்தினம் இரவு சென்னை புறநகர் பகுதிகளில் உள்ள டாஸ்மாக் கடைகளில் பணம் வசூலிக்கும் பணியில் தனியார் நிறுவன ஊழியர் தாஸ், கார் டிரைவர் அபீப் ஆகி யோர் இரவு 10 மணியளவில் 22 டாஸ்மாக் கடைக ளில் வசூலான மொத்தம் ரூ.1 கோடியே 50 லட்சம் பணத்தை பையில் வைத்துக்கொண்டு, ஒரகடம் மேம்பாலம் அருகே உள்ள மற்றொரு டாஸ்மாக் கடைக்குச் சென்றனர்.

மதுக்கடை அருகே காரை நிறுத்திவிட்டு தாஸ் மட் டும் கடைக்குச் சென்றதாக கூறப்படுகிறது. அப்போது கார் டிரைவர் அபீப் மட்டும் காரில் இருந்தார். காருக்குள் ரூ.1.50 கோடி பணம் இருந்தது.

அந்த நேரத்தில் ஒரே மோட்டார் சைக்கிளில் வந்த 3 வாலிபர்கள் திடீரென காரின் மீது மோதி னர். இதனால் அதிர்ச்சியடைந்த டிரைவர் அபீப், அவர்களைக் கண்டித்தார். இதையடுத்து 3 பேரும் அவருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடு பட்டனர்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட இருவர் திடீரென காரை ஓட்டிக் கொண்டு அங்கிருந்து தப்பினர். மற்றொரு வாலி பர் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றார். இந்தச் சம்பவத்தால் டிரைவர் அபீப் அதிர்ச்சிய டைந்தார். இது குறித்து உடனடியாக ஊழியர் தாசுக்கு தகவல் தெரிவித்தார்.

இதற்கிடையே, கொள்ளையர்கள் படப்பை அருகே உள்ள காரணித்தாங்கல் பகுதியில் காரை சாலையோரம் நிறுத்திவிட்டு, அதில் இருந்த ரூ.1.50 கோடி பணத்தை மட்டும் எடுத்துக்கொண்டு தப்பிச் சென்றது தெரியவந்தது.

தேசிய நெடுஞ்சாலைகளில் இந்தித் திணிப்பா?

ஒன்றிய அரசின் இந்தித் திணிப்புக்கு த.வெ.க. அரசு ஒப்புதல் அளிக்கிறதா?

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கேள்வி!

சென்னை, நவ.13-

தேசிய நெடுஞ்சாலைகளில் இந்தி எழுத்துக்கள் இடம் பெற்றிருப்பதற்கு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒன்றிய அரசின் இந்தித் திணிப்புக்கு த.வெ.க. அரசு ஒப்புதல் அளிக்கிறதா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

ஒன்றிய பா.ஜ.க அரசு தனது திட்டங்களை ஒவ் வொன்றாகத் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்துவ தற்கான மும்முரத்தில் இருக்கிறது.

அதற்கு, த.வெ.க. தலைமையிலான கூட்டணி அரசைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. 'அதிகாரம் கிடைத்தால் போதும், யார் ஆட்டுவித்தால் என்ன?' என்ற தொனியில் தான் த.வெ.க. ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.மாநில உரிமைப் பறிப்பு, பண்பாட்டுத் திணிப்பு, நிதி குறைப்பு என்ற எந்தப் பிரச்சினைக்கும் வாயைத் திறக்காமல் அமைதியாக இருக்கிறது த.வெ.க.அரசு. தமிழ் நாட்டைக் கபளீகரம் செய்ய பல்வேறு மறைமுக மான வேலைகளில் ஈடுபட்டிருக்கும் அதே நேரம், தமிழ்நாடும், தமிழ்நாடு அரசும் இதை எப்படி எதிர் கொள்கிறார்கள் என்று பார்ப்பதற்கு வெளிப்படை யாகவும் சில வேலைகளில் ஈடுபடுகிறது.

தமிழ்நாட்டில் மாநில நெடுஞ்சாலைத் துறை வைத்த பெயர்ப்பலகைக ளில் இந்தி இருந்தது என்று கண்டனம் எழுந்தபோது, உடனடியாக ஓர் அமைச்சர் அதனை மறுத்து, சில அதி காரிகளின் தவறு என்று காரணம் சொல்லிவிட்டு, இரு அதிகாரிகளைப் பணியிடை நீக்கம் செய்து ஒரு பரபரப் பைக் காட்டிவிட்டு ஓய்ந் தார்கள்.

கரூர் அரசு மருத்துவம னையில், மருந்துப் பையில் ஹிந்தி இருந்ததற்கும் ஏதேதோ காரணம் சொன் னார்கள்.

இந்தி ஒட்டகம், தமிழ் நாடு கூடாரத்திற்குள் தலையை நுழைக்கிறது, இதன்மூலம் - எச்சரிக்கை.

தஞ்சை - சேலம் தேசிய நெடுஞ்சாலையில்...



இப்போது தேசிய நெடுஞ்சாலைகள் அனைத் திலும் மைல்கற்களைப் புதுப்பித்து, அதில் மும்மொ ழியில் எழுதவிருக்கிறார்கள் என்ற செய்தியும், அதன் தொடக்கமாக தஞ்சை - சேலம் தேசிய நெடுஞ்சா லையில் இந்தியிலும் எழு தப்பட்டு இருக்கிறது என்னும் செய்தியும் வந்தி ருக்கிறது.

தமிழ்நாடு அரசின் இரு மொழிக் கொள்கை என்னா யிற்று? அறிஞர் அண்ணா காலத்திலிருந்து (1967 முதல்) உறுதியாக இருந்துவ ரும் ஆட்சிகளைப் போல இதில் இருக்கப் போகிறார் களா? இல்லை, இரு மொழிக் கொள்கையில் இந்த அரசு உறுதியாக இருக்கும் என்பது வெறும் வாய்வார்த்தை தானா? பா.ஜ.க. அரசுக்குப் பயந்து இந்தித் திணிப்பை அனும தித்தால், தமிழ்நாட்டு மக்க ளும், இளைஞர்களும் அதைப் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார் கள். ரயில்வே துறையிலும் இந்திக்கு முதன்மையிடம் தரும் வகையில், எல்லா ரயில் நிலையங்களிலும் பெயர்ப் பலகையைத் திருத் திக் கொண்டிருக்கிறார்கள் என்று அறிகிறோம்.

போராட்டத்தைத் தூண்ட நினைக்கிறதா?

தமிழ்நாட்டில் இன் னொரு இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத் தைத்தூண்ட நினைக்கிறதா ஒன்றிய அரசு? அதற்குத் துணைபோகிறதா தமிழ் நாடு த.வெ.க. அரசு?

இந்தி - சமஸ்கிருத மொழி - பண்பாட்டுத் திணிப்புகளை எதிர்க்கும் நெஞ்சுரம் கொண்டோர் தமிழ் மறவர்கள்! நெருப்பு டன் விளையாட நினைக்க வேண்டாம் ஒன்றிய அரசு என்று எச்சரிக்க வேண்டி யது நம் கடமை!


ரயில் நிலையங்களில் தமிழுக்கு முதன்மை, நெடுஞ்சாலைக் கற்களில் இருமொழி என்ற நிலைமை திரும்பவில்லை என்றால், இந்தி எழுத்துகளை அழிக் கும் போராட்டத்தை அறி வித்துச் செயல்படுத்தத் திரா விடர் கழகம் தயங்காது! தயங்காது!!

எச்சரிக்கை!

எச்சரிக்கை!!

இவ்வாறு அவர் தெரிவித் துள்ளார்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்ய்யா; வடகிழக்குப் பருவமழை பொய்த்து விட்டால், தமிழ்நாட்டில் தண்ணீர் பஞ்சம் தலைவிரித்தாட வாய்ப்பு உள்ளதாகக் கூறப்படுகிறதே. முன்னெச்சரிக்கையா த.வெ.க. அரசு நடவடிக்கை எடுக்குமா?

போண்டி : **ஆமாய்யா; தென்மேற்குப் பருவமழையாலே மூணில் ஒரு பங்குதான் தண்ணீர் இருக்குதாம். ஏற்கனவே கர்நாடகா தண்ணீர் தர முடியாதுன்னு சொல்லிடுச்சி. விஜய் கோயிலுக்கு போனபோது அப்படியே ஆந்திரா முதலமைச்சரிடம் பேசியதா தகவல். அவர்களாவது தருவாங்களான்னு தெரியலே. த.வெ.க. அரசு என்ன செய்யப்போதோ தெரியல. பார்ப்போம் என்ன நடக்குதுன்னு.**

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. வேண்டுகோளின்படி

ஈரோடு மாவட்ட கிராமங்களுக்கு '4 ஜி' அலைக்கற்றை வசதி!

ஒன்றிய அமைச்சர் தகவல்!

சென்னை, நவ.13 -

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. வேண்டுகோளின்படி, ஈரோடு மாவட்டத்தில் குறிப்பிட்ட சில கிரா மங்களுக்கு 4ஜி அலைக் காற்றை வசதி ஏற்படுத் திட நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாக ஒன் றிய அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.



கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ. ராசா அவர்களுக்கு, ஒன் றிய அமைச்சர் ஜோதிரா தித்ய சிந்தியா அனுப் பிய கடிதம் வருமாறு:

தமிழ்நாட்டின் ஈரோடு மாவட்டத்தில் உள்ள சில கிராமங்களில் 4G அலைக்கற்றை (*mobile connectivity*) வசதியை வழங்குவது தொடர் பாக, தாங்கள் 17.09.2025 அன்று அனுப்பிய கடி தத்தைக் கவனத்தில் கொள்ளுமாறு கேட் டுக்கொள்கிறேன்.

இது குறித்து, ஏற்க னவே நான் 17.10.2025 தேதியிட்ட கடித எண் 60-254/2025-SU-IV (நகல் இணைக்கப்பட்டுள் ளது) வாயிலாக அளித்த பதிலின் தொடர்ச்சி யாக, தற்போது ஒரு மகிழ்ச்சியான செய்தி யைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதன்படி, இதுவரை அலைக்கற்றை வசதி சென்றடையாத கிரா மங்களான காளி திம் பம், இட்டரை, மாவ னாத்தம் மற்றும் பெஜ்ஜலாட்டி ஆகிய கிராமங்கள், 'டிஜிட்டல் பாரத் நிதி' (*Digital Bharat Nidhi - DBN*) திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்ப டும் '4G அலைக்கற்றை விரிவாக்கத் திட்டத்தில்' (*4G Saturation Mobile Project*) சேர்க்கப்பட்டு, அதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மின்வாரியத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் ஒத்திவைப்பு!

பா.மணிமாறன் அறிக்கை!

சென்னை, நவ.13 -

மின்வாரியத் தொழிலாளர் கள் வேலை நிறுத்தம் ஒத்தி வைக்கப்படுவதாக மின்கழக தொ.மு.ச. பொதுச் செயலாளர் பா.மணிமாறன் தெரிவித் துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு மின்வாரி யத்தை தனியார் மயமாக்கும் த.வெ.க. அரசை எதிர்த்து மின் கழகத் தொமுச தலைமையில் மின்வாரிய அனைத்து தொழிற்சங்கங்கள் நேற்று முன்தினம் (11.11.2026) மாநி லம் முழுவதும் ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக, சென்னை அண்ணாநகரில், தொழிலா ளர் ஆணையர் அலுவலகத் தில், தொழிலாளர் துணை ஆ ணை ய ர் மு ன் பு 05.11.2026 மற்றும் 10.11.2026 இரு நாட்கள் மின் வாரிய நிர்வாகம் மற்றும் மின் வாரிய தொழிற்சங்கங்களு டன் பேச்சு வார்த்தை நடைபெற்றது.

பின்னர் 10.11.2026 அன்று மாலை மின்வாரிய த லை வ ர் ம ற் று ம் மேலாண்மை இயக்குநர் அ வ ர் க ளு ட ன் பே ச் சு வார்த்தை நடைபெற்றது.

அதையடுத்து 10.11.2026 அன்று மாலை மின்வாரிய அனைத்து தொழிற்சங்கங்கள் கூ ட் ட ம் ந டை பெ ற் று 11.11.2026 அன்று நடைபெற விருந்த த.வெ.க. அரசை எதிர்த்து மாநிலம் தழுவிய ஒரு நாள் வேலைநிறுத்தம் தற்கா லிகமாக தள்ளிவைக்கப்படுகி றது என்று முடிவெடுக்கப் பட்டுள்ளது.

த.வெ.க. அரசு, மின்வாரி யம் தனியார்மயமாக்கும் முயற்சியை நிறுத்தவில்லை என்றால் மீண்டும் அனைத்து மின்வாரிய தொழிற்சங்கங் கள் இணைந்து மாநிலம் தழு விய மாபெரும் வேலைநிறுத் தம் நடைபெறும்.

இவ்வாறு மின்கழகத் தொ.மு.ச. பொதுச்செயலாளர் பா.மணிமாறன் அறிக்கை யில் தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்டம் முழுவதும்

த.வெ.க. ஆட்சியில் கஞ்சா, குட்கா விற்பனை அதிகரிப்பு!

கண்டுகொள்ளாத காவல்துறை!

சேலம், நவ.13-

சேலம் மாவட்டம் முழு வதும் த.வெ.க. ஆட்சியில் கஞ்சா குட்கா போதை மாத்திரை விற்பது அதிக ரிப்பு. சேலம் மாவட்டம் ஓமலூர் காமண்டபட்டி ரயில்வே பாலத்திற்கு கீழ் கல்லூரி மாணவர்களுக்கு கஞ்சா, விற்பனை செய்து வருவதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது இதை யொட்டி சப் இன்ஸ்பெக் டர் கணேஷ் குமார் மாறு வேடத்தில் அங்கு சென்றார் ஒரு வாலிபர் மாணவர்க ளுக்கு சிறிய பொட்டலங் களை விற்றுக் கொண்டிருந் தார். கணேஷ் குமார் அந்த வாலிபரிடம் சென்று தனக்கு ஒரு பொட்டலம் தேவையென்று கேட்டார் அந்த வாலிபர் ஒரு பொட் டலம் ரூ. 800 என்று கூறி னார். உடனே அந்த வாலி பரை கஞ்சா பொட்டலத்துடன் பிடித்து விசாரனை செய்ததில் அதே பகுதியை சேர்ந்த பாரத் (வயது 25) என்று தெரிந்தது. இவருடைய வீட்டை சோதித்ததில் 50 க்கும் மேற் பட்ட கஞ்சா பொட்டலங் கள் இருந்தது கண்டு பிடிக் கப்பட்டது. இதையொட்டி கைது செய்யப்பட்டார்

அதே பகுதியில் முருகே சன் (வயது 54) என்பவர் வீட்டை சோதனை செய்த தில் மூட்டையில் குட்கா இருந்தது கண்டுபிடிக்கப் பட்டது அவரும் கைது செய்யப் பட்டார்.

சேலம் மாநகரம் பொன் னமா பேட்டை பகுதியில் போதை மாத்திரை விற் பணை செய்வதாக அம்மா பேட்டை போலீஸ் இன்ஸ் பெக்டர் சதீஷ் குமாருக்கு தகவல் கிடைத்தும் அவர் அந்த பகுதிக்கு சென்ற போது 4 பேர் சந்தேகப்ப டும் வகையில் நின்றிருந்த வர்களிடம் சோதனை செய் ததில் 4 பேரிடமும் 300 க்கும் மேற்பட்ட போதை மாத்திரைகள் பறிமுதல் செய்து விசாரித்ததில் ஜீவா னந்தம்,

கிஷோர்குமார், முகமது சந்தோஷ் என்று தெரிய வந் தது. இதே போல சேலம் இரும்பாலை அருகே போலீ சார் ரோந்து பணியில் இருந்த போது ஒரு வாலி பரை பிடித்து விசாரித்த போது போதை மாத்திரை 51 பிடிப்பட்டது. அதே சம யம் போதை மருந்து சிரஞ்சி ஆகியவை கைப்பற்றி கைது செய்து விசாரித் தில் தீபக் சரண் (வயது 24) என்று தெரிய வந்தது. இவர்கள் அனைவரையும் கைது செய் தனர்.




தென்காசி தெற்கு மாவட்டம் ஆயக்குடி பேரூர் கழக நிர்வாகி முத்துக்குமார் அவர்களின் புதல்வி லோக மீனாட்சி அவர்களுக்கு தி.மு.க. இளைஞரணி அறக்கட்டளை சார்பாக கல்விஉதவி தொகை ரூபாய் 25,000–ம் காசோலையை மாணவியின் பெற்றோரிடம் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் வழங்கினார்.உடன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டி.ஆர்.கிருஷ்ணராஜா,ஆய்க்குடி பேரூர் இளைஞரணி நிர்வாகிகள் உள்ளனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கே.கே. கோட்டையப்பன்

நவம்பர் 13 (1996)



தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

ஒன்றுபட்ட திருநெல்வேலி மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராகப் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

சிவந்திப்பட்டி பஞ்சாயத்துத் தலைவராகவும் – மாவட்ட நிலவள வங்கித் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் "இளைஞர் அணியின் செயல்திறன் மிக்க சிங்கக் குட்டியாகவும், அனைவரையும் அரவணைத்து கழகத்தின் ஆக்கப்பணிகளை அயர்வின்றி நிறைவேற்றுகிற அமைதியின் உறைவிடமாகவும் திகழ்ந்தவர்" என தனது இரங்கல் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்

தி.மு.க.